## தமிழ்நாட்டில் கருத்துச் சுதந்திரம் – ஊடக சுதந்திரம் மிகப் பாதுகாப்பாக உள்ளது!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறந்த நிர்வாகி - செயல் தலைவர்!

### சென்னை தெற்கு மாவட்டம் – சைதை கிழக்குப் பகுதி சார்பில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னின்று நடத்திய முதல்வர் பிறந்தநாள் விழாவில் – ‘இந்து’ என்.ராம் புகழாரம்!

**சென்னை, மார்ச் 15 -**

**தமிழ்நாட்டில் கருத்துச் சுதந்திரம் - ஊடக சுதந்திரம் மிக பாதுகாப்பாக உள்ளது என்றும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறந்த நிர்வாகி - செயல் தலைவர் என்றும் சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப் பகுதி சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கருத்தரங்கில் பங்கேற்றுப் பேசிய ‘இந்து’ என்.ராம் குறிப்பிட்டார்.**

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப் பகுதியில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் சென்னை குருநாநக் கல்லூரியில் நடைபெற்ற முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் இந்து என். ராம் ஆற்றிய உரை வருமாறு:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாளையொட்டி என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய தினம் நான் ஊரில் இல்லை. வெளியூரில் இருந்தேன். அதனால் வாழ்த்து சொல்லி அவருக்கு மெஸேஜ் அனுப்பி வைத்தேன். இந்த பிறந்த நாளை கொண்டாடுவதில் சிறப்பு அம்சங்கள் உண்டு. கருத்தரங்கம் தான் மிகவும் முக்கியமானது. பல கருத்துகளை விவாதித்து, வேறு கருத்து இருந்தாலும் அதனை கொண்டு வந்து விவாதித்து, அதன் சாரம்சத்தையும் தெளி வாக கொண்டு வருவது சிறப்பானதாகும்.

மா.சு. அவர்கள் எடுக்கும் கருத்தரங்கு விழாக்களில் நான் பல நேரங்களில் பங்கேற்று இருக்கிறேன். அதில் ஒன்றை நான் கூர்மையாக கவனித்திருக்கிறேன். எந்தக் கூட்டத்திலும் மாற்றுக் கருத்து இல்லாத கூட்டமே நடக்காது, எதிர்பார்க்காத பேச்சாளர்கள் வருவார்கள். தி.மு.க.வை கடுமையாக விமர்சித்த பேச்சாளர்களும் வருவார்கள். அவர்கள் எப்படி வருகிறார்கள்? அவர் மட்டுமல்ல கட்சியும் அப்படித்தான் இவையெல்லாம் நல்ல கலாச்சாரத்தைத் தான். வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக மா.சு. நடத்துகின்ற கூட்டங்களின் சிறப்பு அது தான் என்று நான் நினைக்கிறேன். அர்த்தமுள்ள கருத்துகளை விவாதித்து தெளிவுபடுத்தி சில விஷயங்களை நாமே கற்றுக் கொண்டு அந்தக் கூட்டங்களில் பேச்சாளர்களே கற்றுக் கொண்டு நடத்துவது தான் சிறப்பானதாகும். வழக்கமாக ஒரு பிறந்த நாள் விழா கூட்டத்தில் பல பேர் வந்து, மாலை போடுவார்கள். புகழ்வார்கள். கவிதை படிப்பார்கள். ஆனால் இந்தக் கருத்தரங்கத்தின் அடுத்த நாள், அடுத்த வருடம் இது பற்றி ஞாபகம் இருக்கும் .

**கலைஞருடைய சித்தாந்தத்தை பின்பற்றக்கூடிய முதல்வர்!**

எனக்கு முன்னால் பேசியவர்கள் முக்கியமான சில கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள்.

நக்கீரன் கோபால் அவர்கள் இங்கே கூறியது மாதிரி; கலைஞர் கூறியதை இங்கே சொல்லலாம். இதனை கலைஞர் அவர்களைத் தவிர வேறு யாராலும் சொல்ல முடியாது. முக்கியமாக ஸ்டாலின் பற்றி கலைஞர் அவர்கள் கூறியது. ‘உழைப்பு என்றாலே ஸ்டாலின்’ என்றார் கலைஞர்! கலைஞர் அதிகமாக தேவையில்லாமல் யாரையும் புகழ மாட்டார். கலைஞர் அவர்களின் கருத்துக்கு பொருள் உண்டு. என்னைவிட கலைஞர் மூத்தவராக இருந்தாலும் என்னை ஒரு நண்பராகத்தான் கருதுவார். நான் அவரைப் பற்றி விமர்சித்தாலும், வேறு கருத்து கூறினாலும் அவரிடம் சென்று பேசலாம். இதில் முதலமைச்சர் அவர்கள் வேறு ஸ்டைல். கலைஞர் அவர்களுடைய காப்பி (நகல்) அல்ல. அதனை எல்லாவிஷயங்களிலும் பார்க்கலாம்; ஆனால் அதே கலைஞர் அவர்களுடைய சிந்தனை, சித்தாந்தத்தை. பின்பற்றக்கூடிய ஒரு சிறந்த தலைவராக மு.க.ஸ்டாலின் வந்திருக்கிறார்.

**செயலில் முதலில் நிற்பவர்!**

**இரண்டு வருடத்திலோ, மூன்று வருடத்திலோ ஸ்டாலின் அரசியலுக்கு வந்தவர் அல்ல. இவர் நெருக்கடி காலக் கட்டத்தில் சிறைக்குச் சென்றார். அப்போது அவரை டார்ச்சர் செய்திருக்கிறார்கள். அந்த அனுபவம் நமது முதலமைச்சருக்கு உண்டு. அவர் சிறந்த ஒரு நிர்வாகி. பேச்சை விட செயலில் முன்னால் நிற்கக் கூடிய ஒரு தலைவர். தோல்வியோ, வெற்றியோ எது வந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த தைரிய மிக்கத் தலைவர்.**

காலையில் நாங்கள் குரூப்பாக நடைபயிற்சி செல்வோம். எந்த மினிஸ்டரும் இவ்வளவு பிட்டாக இருப்பதை நான் பார்த்ததில்லை. மா.சு. சொல்ல மாட்டார். ஆனால் நாங்கள் அவரை பார்க்கிறோம். 160 மாரத்தான் ஓட்டம் ஓடி இருக்கிறார். வேறு யாரையாவது பார்த்து இருக்கிறீர்களா, வேறு எந்த அமைச்சரோ, தலைவரோ இப்படி செய்ததாக எனக்குத் தெரியவில்லை.

**முதலமைச்சரைப் பொறுத்தவரை அவர் ஒரு அடக்கம், ஒரு ஸ்சாப்ட் என்றும் சொல்லலாம். கொள்கைப் பிடிப்பில் ஸ்டராங்காக இருப்பவர். ஆனால் நடைமுறையில் ஸ்சாப்ட்டாக நடக்கக் கூடிய தலைவர். அதாவது பாதுகாப்புக்கு யாராவது வந்தார்கள் என்றால் வழி விடு வழி விடு என்று நிறுத்த மாட்டார்கள். ஒரு வயதானவரைப் பார்த்தால் அவரைப் பார்த்து நலம் விசாரிப்பார். அண்மையில் முதல்வர் ஒரு கருத்தை பேட்டியில் கூறினார்.**



**மதவாதத்திற்கு எதிராக உள்ள கட்சி தி.மு.க.!**

அதாவது முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டணி உறுதியாக அப்படியே இருக்கிறது என்று கூறினார். அதில் மீதி கட்சிகளுக்கு வாய்ப்பில்லை என்று சொல்பவராகத்தான் எனக்கு புரிந்தது. அது உண்மைதான். அதனைப் பற்றி கேட்கும் போது, மாற்றுக் கருத்து இல்லாமல் எதற்காக கட்சி நடத்தவேண்டும். ஆனால் கூட்டணியில் இருக்கும் போது தெளிவாகச் சொன்னார். கூட்டணி நடக்கும் போது குடும்பத்தில் நடப்பது போன்று பல விஷயங்கள் வித்தியாசங்கள் வரும். சில நேரங்களில் சில கருத்து மோதல்கள் வரும். ஆனாலும் ஒன்றாகத்தான் இருப்போம் என்று சொன்னார்.

அதனுடைய உள் அர்த்தம் என்ன என்றால் பேச்சு சுதந்திரம், அதனை யாராலும் பறித்துக் கொள்ள முடியாது. தடுக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் உறுதியாக இருப்போம். இன்றைக்கு மதவாதத்திற்கு எதிராக நாட்டில் உறுதியாக இருக்கக் கூடிய ஒரு கட்சி என்றால் தி.முக..தான். அதில் தி.மு.க. உறுதியாக இருக்கக் கூடிய கட்சி. அதே மாதிரி கேரளாவிலும் இடது சாரி கட்சியினர் பா.ஜ.க.வு டன் போக மாட்டார்கள். அவர்கள் இந்துத்துவாவுடன் போக மாட்டார்கள்.

**தொகுதிவரையறைக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்!**

இன்றைக்கு அழைப்பு விடுத்து இருக்க முடியுமா? பல முதலமைச்சர்களை சந்திக்க இன்றைக்கு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு அமைச்சர் ப்ளஸ் ஒரு எம்.பி.க்கள் சென்று சந்திப்பார்கள். அவர்கள்அங்கே போய் அழைப்பார்கள். முதலமைச்சர் ஒரு தேதியை முடிவு செய்து அதில் நீங்கள் கலந்து கொள்வது தான் எங்களுக்கு ஒரு அங்கீகாரம் என்று சொல்வது. இதனை ஒரு தைரியமாக இந்தத் தொகுதி வரையறை திட்டத்திற்கு எதிராக குரல் கொடுப்பதில் நம்பர் ஒன்றாக இருப்பவர் நமது முதலமைச்சர்.

இந்தித் திணிப்புக்கு எதிராக குரல் கொடுப்பது. எந்த மொழியும் நமக்கு எதிரி கிடையாது. இந்தியாவில் பல மொழிகள் இருக்கக் கூடியது. பாண்டே அவர்கள் இந்தி பேசக் கூடிய குடும்பத்தில் இருந்து வந்தவர். ஆனால் தமிழில் இங்கே பேசுகிறார். பாண்டே பீகாரில் இருந்தால், உத்தரப்பிரதேசத்தில் இருந்தால் தமிழ் பேசுவாரா? அவர் சொல்கிறார் எந்த மொழி வேண்டு மானாலும் படிக்கலாம் என்று. ஆனால் இந்தி மட்டும் தான் படிக்கிறார்கள். சில பேர் இங்கிலீஸ் படிக்கிறார்கள்.

**பிரதமர் நேரு உறுதி மொழி!**

இந்தி திணிப்பு என்பது இன்றைக்கு மட்டும் பிரச்சினைஅல்ல. காங்கிரஸ் காலத்திலும்இருந்தது. போராட்டம்நடந்தது . தி.மு.க.. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அது ஒரு முக்கியமான ஒரு நிகழ்ச்சி. அப்போது பிரசிடென்சி கல்லூரியில் நான் எம்.ஏ. மாணவனாக இருந்தேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அப்போது நான் எம்.ஏ. ஹிஸ்ட்ரி படித்துக் கொண்டு இருந்தேன். அன்று இருந்த அதே எழுச்சி இன்றைக்கும் தெரிகிறது. தமிழ் மக்களுக்கு இந்தி வெறுப்பாக இல்லை. இந்தியைத் திணிப்பதற்கு எதிராக ஒரு போர் நடந்தது தமிழ்நாட்டில் தான்..

இந்தி திணிப்பது என்பது ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு போக்கு. அந்த நேரத்தில் தான் நேரு அவர்கள் ஒரு உறுதிமொழி கொடுத்தார் . இந்தி பேசாத மாநிலங்களுடைய மக்களின் சம்பந்தம் இல்லாமல் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்றார். தமிழ்நாடு ஒரு பாதையை எடுத்தது. இருமொழிக்கொள்கைதான். மும்மொழிக் கொள்கை அல்ல என்று. எவ்வளவு மொழி வேண்டுமானாலும் படிக்கலாம். ஆனால் - அப்படி இந்தியைத் திணிப்பவர்களை எதிர்ப்போம் - என்று உறுதியான கொள்கை அதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதற்கு நான் முழுமையான ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மோசமான ஆளுநர் ரவி !**

மாணவர்கள் மத்தியில் இன்றைக்கு பா.ஜ.க.தலை வர்கள் கையெழுத்து எல்லாம் வாங்குவதாக பேசுகிறார்கள். அது ஒன்றும் தமிழ்நாட்டில் எடுபடாது. இந்தியைத் திணிப்பது என்பது இன்றைக்கு ஒரு முக்கிய மான விஷயமாக இருக்கிறது. அதே மாதிரி தொகுதி மறுவரையறை குறிப்பாக ரவி என்பவர். இந்தியாவில் மோசமான கவர்னர் ஒருவர் இருக்கிறார் என்றால் அதில் ரவி தான் டாப்பில் இருப்பார். எந்தக் கூட்டத்தி லும் இந்த விமர்சனம் இல்லாமல் நான் பேசுவது இல்லை. ஏன் என்றால் அவர் மீது எனக்கு தனிப்பட்ட வெறுப்பு கிடையாது. அவர் ஒரு ஆளுநர் தான். ஆனால் எல்லா விஷயங்களி லும் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. தலைவர்களைப் போல் நடந்து கொள்கிறார். அதனை அவர் ஒன்றிய அரசாங்கம் சொல்லி தான் செய்து கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

ஆனால் தமிழ்நாடு என்ற பெயரையே மாற்றப் பார்த்தவர் அவர். எனக்கு அழைப்பிதழ் வந்து இருக்கிறது. தமிழ்நாடு என்பது தவறான பெயர். தமிழகம் தான் இருக்க வேண்டும் என்று ஆளுநர் சொல்கிறார். பல சட்டமசோதாக்களை கிடப்பில் போட்டு வைத்து இருக்கிறார். அது குறித்து உச்சநீதிமன்றத்தில் கூட வழக்கு இருக்கிறது.

**மாநில அரசுக்கு எதிராக ஒன்றிய அரசு!**

இதனை எல்லாம் எதிர்க்கக் கூடிய ஒரு கொள்கை வேண்டும். இந்த முதல் கூட்டத்தில் தொகுதி வரையறை குறித்தும் இன்னும் போகப் போக ஒன்றிய அரசின் தொடர்பு குறித்தும் விவாதித்து வேறுபாதையில் கொண்டு போக வேண்டும். இன்றைக்கு மட்டுமல்ல இதே மாதிரி காங்கிரஸ் காலத்திலும் இது தான் நடந்தது. உண்மையைச் சொல்ல வேண்டும். காங்கிரசும் செய்தது. இரண்டு முறை கலைஞர்அரசை காங்கிரசால் கலைத்தார்கள். ஒரு முறை சந்திரசேகர் அரசு இருந்தாலும், அது காங்கிரஸ் கட்சியின் அழுத்தத்தால் தான் நடந்தது. அநியாயமாக தி.மு.க. அரசாங்கத்தை கலைத்தார்கள்.

இன்றைக்கு அதனை செய்ய முடியவில்லை என்றாலும் பல வழிகளில் மாநில அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றிய அரசாங்கமும், அங்கே டெல்லியில் இருக்கக் கூடிய ஆளும் கட்சியும் செயல்படுகின்றன. அதனை நாம் எதிர்க்க வேண்டும். இந்த மாதிரியான விஷயங்களில் தி.மு.க. வும், அதன் கூட்டணிக் கட்சிகளும், தமிழ்நாடு மக்களும் அதில் முக்கியமான பங்கு இருக்கிறது. 2026 மட்டுமல்ல அடுத்து 10, 15வருடங்களில் இது இருக்கிறது.

இன்றைக்கு பா.ஜ.க. மெஜாரிட்டியை இழந்து விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு பெரிய அமைப்பு இருக்கு. ஆர்.எஸ்.எஸ். இருக்கு. அது சாதாரண இயக்கம்அல்ல. அவர்கள் கட்சி ஆரம்பித்து நூறு ஆண்டுகள் ஆகப்போகிறது. அவர்கள் பல வழிகளில் ஊடகங்களின் தொடர்புகள் உண்டு. ஆனாலும் அவர்களை தோற்கடிக்க முடியும். இந்திய மக்களுக்கு இந்த மதவாதம் பிடிக்காது. அதனால் தான் இன்றைக்கு உத்தரப் பிரதே சத்தில் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. ராமர் கோயில் அமைக்கப்பட்ட தொகுதியில் கூட அவர்கள் வெற்றி பெற முடியவில்லை தோற்று விட்டார்கள். வெறும் மதத்தை வைத்து வேறு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்ப்பைத் தூண்டும் அரசியல் நடத்துவது என்பது ஐந்து வருடம் நடத்தலாம், பத்து வருடம் நடத்தலாம் ஆனால் ஒரு நேரம் வரும். அதனை, மக்கள் அவர்களை நிராகரிப்பார்கள் என்பது உறுதியான விஷயம். பல விஷயங்களை இதே மாதிரி பேசலாம்.

**விகடன் கார்ட்டூன்!**

அது மட்டுமல்ல, மற்றொன்று பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம். இன்றைக்கு விகடன் ப்ளஸ் டிஜிட்டலில் ஒரு கார்ட்டூனை போட்டார்கள். அது என்ன கார்ட்டூன் என்றால் அந்த வழக்கு இன்றைக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்து கொண்டு இருக்கு. அது என்ன கார்ட்டூன் என்றால்? பிரதமர் மோடி அவர்கள் அமெரிக்க அதிபர் ட்ரம்பை பார்க்க போனார். அதற்கு இரண்டு நாள் முன்னால் இந்த கார்ட்டூன் வந்தது. அந்தக் கார்ட்டூனின் உள்ளடக்கம் என்னவென்றால் அமெரிக்காவில் இந்தியர்கள் விசா இல்லாமல் இருந்தால் அவர்களை திருப்பி அனுப்புகிறது. வெளியேற்றுவது அவர்களின் உரிமை. ஆனால் அவர்களை கை கால்களில் விலங்குபோட்டு அனுப்பி வைத்தால் அது ஒரு சித்திரவதை தானே. பதினைந்து இருபது மணிநேரம் அவர்களை இப்படி கொண்டு வந்தார்கள். அது குறித்து ஒன்றிய அரசு ஒரு கருத்தும் குறிப்பாக புகாரும் செய்ததாக தெரியவில்லை.

இது பரவலாக பத்திரிகைகளில் ஊடகங்களில் வந்தது அதனை மையப்படுத்தி இந்த கார்ட்டூனை விகடன் ப்ளஸில் போட்டு இருக்கிறார்கள். மோடி ட்ரம்ப் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கிறார். அவருடைய கை கால்கள் கட்டி இருக்கு ட்ரம்ப் அவரைப் பார்த்து சிரிக்கிறார். இது என்ன தவறு?

உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். முன்பெல்லாம் இதே மாதிரியான கார்ட்டூன்கள் அதிகளவில் வரும். ஆர்.கே. லட்சுமணன் போடும் போது அந்தத் தலைவர்கள் எல்லாம் அந்த கிண்டல் செய்கின்ற கார்ட்டூன்களின் ஒரிஜனலை வாங்கி வைத்துக் கொள்வார்கள். நேரு, அண்ணா, எல்லாம். அப்படி அந்த கார்ட்டூன் மூலம் கிண்டல் செய்தால் அது அவர்களுக்குப் பிடிக்கும். அதனை ப்ரேம் செய்து வைத்துக் கொள்வார்கள்.

இன்றைக்கு அதனை சகிக்க முடியாத நிலைமைதான் ஏற்பட்டு இருக்கிறது. என்ன செய்தார்கள்? ஒன்றிய அரசின் தகவல் தொழில் நுட்ப துறையா னது கார்ட்டூனை மட்டும் எடுக்கவில்லை. அந்த வெப்சைட்டையே முடக்கிட்டாங்க. சென்னை உயர்நீதிமன்றம் அதனை நீக்கச் சொல்லி இருக்கிறது. எதற்காகச் சொன்னேன் என்றால் இந்த கார்ட்டூன் வெளிவந்ததை முடக்கிய தற்காக விகடனுக்கு ஆதரவாக முதன் முதலில் குரல் கொடுத்தது யார் என்றால் நம் முதல்அமைச்சர் அவர்கள் தான். எக்ஸ் பக்கத்தில் அதனை கண்டிக்கிறேன் என்று கூறினார்.

அதன் அர்த்தம் என்னவென்றால். இந்த மாநிலத்தில் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் இருக்கும். அதனை நான் பாதுகாப்பேன். எங்கள் ஆட்சி அதனை பாதுகாக்கும். எங்களை விமர்சனம் செய்கின்ற கண்டம் செய்கின்ற உரிமை உண்டு. பத்திரிகை சுதந்திரம் முக்கியம். கலைஞர் அவர்களைவிட பத்திரிகை உலகத்தில் யார் அதிகம் பங்களிப்பை செய்திருக்கிறார் என்று பார்த்தால் யாருமே இருக்க முடியாது. ஒரு இடத்தில் கமலஹாசன் கூறினார் என்று நினைக்கிறேன். நண்பர் கோபால் கூட அந்தக் கூட்டத்தில் இருந்தார் என்று நினைக்கிறேன்.

**மகாத்மா காந்திக்குப் பிறகு அதிகமாக எழுதியது கலைஞர்!**

**அதாவது மகாத்மா காந்திக்குப் பிறகு அதிகமாக எழுதியது கலைஞர் அவர்கள் தான் என்று முரசொலி விழாவில் சொல்லி இருக்கிறார். இது ஒரு முக்கியமான அம்சம். தி.மு.க. ஆட்சியில் கருத்து சுதந்திரம், ஊடக சுதந்திரம் நன்றாக இருக்கிறது. என்பதைப் பற்றி கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக என்னுடைய முழுமையான ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக குறிப்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு இன்றைக்கு அவருக்கு பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்து இந்த வாய்ப்பு கொடுத்த மா.சு. அவர்களுக்கு என்னுடைய நன்றி .**

இவ்வாறு இந்து என். ராம் உரை யாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜே.எஸ். இராசு

**மார்ச் 15 (2000)**



கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

“பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்” எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தோழர் சாரங்கபாணி

**மார்ச் 15 (1965)**



மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, “இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!” என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அங்கு “தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்” என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.

சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**